Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

த்ரிவேதி

ஸ்மார்த்த ஸந்த்யாவந்தனம்

(ப்ரஹ்மயஜ்ஞும், ருக் - யஜுர் உபாகர்மம் உள்பட)

❖ லிப்கோ பதிப்பு ❖

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ :

த்ரிவேதி ஸ்மார்த்த ஸந்த்யாவந்தனம்

[ப்ரஹ்மயஜ்ஞும், ருக்-யஜுர் உபாகர்மம் உள்பட]

பதிப்பகத்தார்

லிப்கோ பப்ளிஷர்ஸ் (பி.) லிட்.

பு.எண் 36, வடக்கு சாலை, மேற்கு சி.ஐ.டி. நகர், சென்னை - 600 035.
தொலைபேசி : 24341538, 24336467, தொலைநகலி : 044-24310659
E-mail : info@lifcobooks.com ❖ Website : www.lifcobooks.com

லிப்கோ புத்தகங்கள் கீழ்க்காணும் இடங்களிலும் கிடைக்கும்:

சென்னை

எம் தாமோதரம் & கம்பெனி,
15, அம்பர்ஸன் தெரு, ஜார்ஜ் டவுன், சென்னை - 600 108.

திருச்சி

லிப்கோ பப்ளிஷர்ஸ் (பி.) லிட்.,
17/1, நந்திகோயில் தெரு, தெப்பக்குளம், திருச்சி - 620 002.

ஹிக்கின்பாதம்ஸ், மற்றும் பிரபல புத்தக வியாபாரிகள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

© பதிப்புரிமை பதிப்பகத்தாரைச் சார்ந்தது

முதல் பதிப்பு : 1967
இரண்டாவது பதிப்பு : 1971
மூன்றாவது பதிப்பு : 1976
நான்காம் பதிப்பு : 1978
ஐந்தாம் பதிப்பு : 1981
ஆறாம் பதிப்பு : 1982
மறு அச்சு : 1985
" 1987
" 1990
" 1992
" 1994
" 1996
" 1998
" 2000
" 2003
" 2004
" 2006
" 2009
" 2010
2012

விலை : ரூ. 20

அச்சிட்டோர் : சங்கர் பிரிண்டர்ஸ் (பி) லிட்., சென்னை42

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பொருளடக்கம்

	பக்கம்
முன்னுரை ...	4
உபநயனமும் ஸந்த்யாவந்தனமும் ...	6
பொதுக் குறிப்புகள் ...	13
சரியான உச்சரிப்பு ...	16
ஸந்த்யாவந்தனம்	
காலை ஸந்த்யாவந்தனம் ...	17
மாத்யாஹ்நிகம் ...	30
மாலை ஸந்த்யாவந்தனம் ...	46
ப்ரஹ்ம யஜ்ஞம்	
யஜுர்வேதிகளின் ப்ரஹ்ம யஜ்ஞம் ...	60
ஸாமவேதிகளின் ப்ரஹ்ம யஜ்ஞம் ...	64
ரிக்வேதிகளின் ப்ரஹ்ம யஜ்ஞம் ...	68
ரிக்-யஜுர் உபாகர்மம்	
முன்னுரை ...	72
ஸமிதாதானம் ...	75
'காமோகார்ஷீத்' ஜபம் ...	79
மஹாஸங்கல்பம் ...	80
யஜ்ஞோபவீத தாரணம் ...	84
காண்டரிஷி தர்ப்பணம் ...	85
அத்யயன ஹோமம் ...	86
அத்யயன ஆரம்பம் ...	87
காயத்ரி ஜப ஸங்கல்பம் ...	90
பரிஷேசனம் ...	
சாதுர்மாஸாதி நிகண்டு ...	91
நமஸ்காரமும் அபிவாதனமும் ...	93

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

முன்னுரை

ஸர்வேச்வரனின் ஸ்ருஷ்டிக்குள் அடங்கிய இப் பூலோகத்திற்குக் 'கர்மபூமி' என்று பெயர். வேதங்களும் சாஸ்திரங்களும் விதித்துள்ள கர்மாக்களை ஒவ்வொருவரும் தவறாமல் செய்து இகபரசுகங்களை அடையவேண்டுமென்பதே 'கர்ம பூமி' என்பதன் உட்பொருளாகும்.

" க்ஷிப்ரம் ஹி மாநுஷே லோகே
ஸித்தி[4]ர் ப[4]வதி கர்மஜா "

என்ற பகவத்கீதை வசனத்துக்கிணங்க, மற்ற லோகங்களைக் காட்டிலும், இப்பூலோகத்தில் செய்யப்படும் கர்மாக்கள் விரைவில் பலனளிக்கின்றன—என்பதும் இப்பூவுலகிற்குள்ள ஏற்றமாகும்.

எனவே, நம் நாட்டுப் பண்டைக் காலத்திய ஆசா வழக்கத்தின்படி வேதங்களையும் வைதிக மந்திரங்களையு ஒட்டிய கர்மாக்களை, பிரம்ம, க்ஷத்திரிய, வைசியரெனப்படு மூவருணத்தாரும் செய்யவேண்டும். அதனால், அவர்களுக்கு நாட்டிலுள்ள மற்ற ஜனங்களுக்கும் நாட்டுக்கும் க்ஷேம உண்டாகும்.

அத்தகைய கர்மாக்கள் "நித்தியம், நைமித்திக காம்யம்" என்று மூன்று வகையானவை.

(1) எதைச் செய்யாவிட்டால் பாவம் உண்டாகுமோ அது 'நித்திய கர்மம்' எனப்படும். ஆகவே, நித்திய கர் தைக் கடமையென்றே செய்யவேண்டும். ஸந்த்யாவந்தன ப்ரஹ்ம யஜ்ஞம், ஔபாஸநம், தேவபூஜை, உபாகர்மம் இ போன்றவை நித்திய கர்மாக்களாகும்.

(2) ஏதாவது ஒரு நிமித்தமாகக் குறிப்பிட்ட காலத் செய்யப்படுபவை 'நைமித்திக கர்மாக்கள்' எனப்படுகின் கிரகண தர்ப்பணம், மாதப் பிறப்பு தர்ப்பணம் மற் பிராயஸ்சித்தமாகச் செய்யப்படும் சில கர்மாக்கள் நைமி கங்கள்.

(3) பணம், புத்திரன், மழை, சத்ருஜயம், ஸ்வர்க்க போன்ற பலன்களை உத்தேசித்துச் செய்யப்படும் கர்மாக்க 'காம்ய கர்மாக்கள்' எனப்படும்.

மேற்கண்ட மூன்று விதமான கர்மாக்களில் ஸந் வந்தனம் முதலிய நித்திய கர்மாக்களை எந்நிலையிலும் செ கூடாது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

" ஸந்த்⁴யாஹீனோ (அ) ஶுசிர் நித்யம்
அநர்ஹ: ஸர்வகர்மஸு "

"ஸந்த்யாவந்தனம் செய்யாதவன் அசுத்தமானவன். ஆகவே, அவன் மற்ற எந்த கர்மாவையும் செய்ய அதிகாரம் கிடையாது" என்று சாஸ்திரம் வற்புறுத்துகிறது.

மற்றும் ஸந்த்யாவந்தனம் செய்வது ஆரோக்கிய வாழ்வுக்கு இன்றியமையாததென்று விஞ்ஞானிகளும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆரோக்யத்துக்கு அதிதேவதை, சூரியன். அவனை உபாஸித்து அறிவும் ஆரோக்யமும் செல்வமும் பெறக்கூடிய காயத்ரீ மந்திரத்தைவிட மேலான மந்திரம் வேதங்களிலேயே இல்லை என்பர். அப்படியிருக்க, இந்நாட்களில், உபநயனமான பிராம்மணச் சிறுவர்களும், மற்றவர்களும் ஸந்த்யாவந்தனம் போன்ற விடத்தகாத கர்மாக்களை அலட்சியம் செய்து விட்டுவிடுவது வழக்கமாகி விட்டது. இவ்வுயர்ந்த கடமையை நிறைவேற்றுவதற்காகச் செய்யப்படும் உபநயனம், ஆடம்பரச் சடங்காக மாத்திரமே செய்யப்படுகிறது. இத்தகைய கடமையைச் செய்யாமலிருப்பதால், நாட்டுக்கு எவ்வளவு கேடு விளைகிறதென்பதை அறியாமலிருப்பது வருந்தத்தக்கதாகும்.

இப்புத்தகத்தில் யஜுர்வேதிகளான ஸ்மார்த்தர்கள் அனுஷ்டிக்கும்படி ஸந்த்யாவந்தன மந்திரங்களும் பிரயோகங்களும் விரிவாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

மற்றும், காலை, மத்யான்னம், மாலை ஸந்த்யாவந்தனங்களின் மந்த்ரதந்த்ரங்கள் எல்லாம் தனித்தனியாகக் கொடுக்கப்பட்டிருப்பதே இந்நூலின் சிறப்பாகும். அதனால் காலை ஸந்த்யாவந்தனத்தைப் போலவே, மாத்யாஹ்நிகம், மாலை ஸந்த்யாவந்தனம் இவைகளை வெகு சுலபமாக ஒவ்வொருவரும் புஸ்தகத்தை வைத்துக்கொண்டே செய்யக் கற்றுக் கொள்ளலாம்.

ஆகவே, எல்லோரும் இப்புத்தகத்தின் உதவியால் ஸந்த்யாவந்தனம் என்ற நித்திய கர்மாவை அனுஷ்டித்து, சீரும் சிறப்பும் கொண்ட வாழ்க்கையைப் பெற்று நாட்டுக்கும் நல்லது செய்வோமாக.

ஸர்வே ஜநா: ஸுகினோ பவந்து!

கீழாத்தூர் ஸ்ரீநிவாஸாச்சாரியர், P.O.L.,
ந்யாய சிரோமணி & ஹிந்தீ விசாரத்,
கௌரவப் பதிப்பாசிரியர்.

சென்னை-600017,
23—2—1976.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உபநயனமும் ஸந்த்யாவந்தனமும்

ஸந்த்யாவந்தனம் என்ற நித்ய கர்மாவை உபநயன மான பிறகே அனுஷ்டிக்க வேண்டும். ஆகவே உபநயனத்தைப் பற்றி பெற்றோர்களும் பிள்ளைகளும் அறிந்துகொள்ள வேண்டியது மிக்க அவசியமாகும்.

உபநயனமென்பது ப்ரஹ்ம, க்ஷத்ரிய, வைச்யரெனப் படும் மூவர்ணத்தாருக்கும் ஏற்பட்டிருக்கும் ஒருவித வைதிகச் சடங்காகும்.

உபநயனம் என்ற சொல்லுக்கு (உப+நயநம்) "அருகில் அழைத்துச் செல்லுதல்" அதாவது ஒரு சிறுவனுக்கு யக்ஞோபவீதம் என்ற பூணூலை அணிவித்து, காயத்ரி என்ற மந்த்ரத்தை உபதேசிப்பதன் மூலம், ப்ரஹ்மம் என்று அழைக் கப்படும் வேதத்தின் அருகில் அவனை அழைத்துச் செல் தாகும். அதாவது, அன்றுமுதல் அவன் வேதங்களைக் கற் வும், வேத சம்பந்தமுள்ள கர்மாக்களை அனுஷ்டிக்கவு அதிகாரமுள்ளவனாகச் செய்யப்படுகிறான்.

உபநயன முறை

வேதங்களிலும், மனுஸ்மிருதி போன்றவைகளிலு மூவருணத்தாருக்கும் எந்த எந்த வயதில் உபநயனம் செய் வேண்டுமென்பது நன்றாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ப்ராம்மணர்களுக்குக் கர்ப்பாஷ்டமத்தில் (அதாவ பிறந்தது முதல் 7-வது வயதில்)உபநயனம் செய்யவேண்டு அப்படிச் செய்ய சௌகரியமில்லாதவர்கள் பதினாறுவ வயதுக்குள் உபநயனம் செய்யலாம். அதற்குமேல் உ நயனம் செய்தால், அவனுக்கு உபதேசிக்கப்படும் காயத் மந்த்ரம் பலிக்காதென்றும், அவன் ப்ராம்மணனாக ஆகமாட் னென்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. (இந்நாட்களில் ச யாணத்திற்கு நிச்சயம் செய்தபின் திருப்பதிக்கோ வேறுக்ஷே திரத்திற்கோ சென்று பூணூல் போட்டுக்கொண்டு திரும்ப ரகசியச் சடங்காக இது மாறியிருப்பது கவனிக்கத்தக்கது.

ஆகவே, உபநயனத்தை ஒரு பெரிய வைபவமாக நினை காமல், குறைந்த செலவில், ஆடம்பரமில்லாமல், 16 வயது குள் தம் பிள்ளைகளுக்கு உபநயனம் செய்வித்து அவர்களுழ ப்ரஹ்மதேஜஸும் அதன் மூலமாக ஸகல சௌகரியங்களு ஏற்படுமாறு பெற்றோர்கள் செய்யவேண்டியது மிக அவசியமாகும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸந்த்யாவந்தன முறை

(தேவீபாகவதம் 11-ஆவது ஸ்கந்தம் 16, 17, 19-வது அத்யாயங்களில், ஸந்த்யாவந்தன முறை விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. அவைகளிலிருந்து சில சுலோகங்கள் அர்த்தத்துடன் இங்கு கூறப்படுகின்றன.)

காலை ஸந்த்யாவந்தன காலம்

உத்தமா தாரகோபேதா மத்⁴யமா லுப்ததாரகா |
அத⁴மா ஸூர்யஸஹிதா ப்ராதஸ்ஸந்த்⁴யா த்ரிதா⁴ மதா

(1) நக்ஷத்ரங்கள் காணப்படும்போது ஸந்த்யாவந்தனம் செய்வது உத்தமம்.
(2) நக்ஷத்ரங்கள் மறைந்தபின் (சூரியோதயத்துக்குமுன்) செய்வது மத்யமம்.
(3) சூரியன் உதயமாகிய பின் செய்வது அதமம்.

இவ்வாறு காலை ஸந்த்யாவந்தனத்திற்கு மூன்று காலங்கள்.

மாத்யாஹ்நிக காலம்

மத்⁴யாஹ்நே மத்⁴யபாஸ்கராத்

சூரியன் ஆகாசமத்தியில் (தலைக்கு நேராக) இருக்கும்போது மாத்யாஹ்நிகம் செய்யவேண்டும்.

ஸாயம் ஸந்த்யாவந்தன காலம்

உத்தமா ஸூர்யஸஹிதா, மத்⁴யமாSஸ்தமிதே ரவௌ |
அத⁴மா தாரகோபேதா ஸாயம்ஸந்த்⁴யா த்ரிதா⁴ மதா ||

(1) சூரியன் அஸ்தமிப்பதற்கு முன் செய்வது உத்தமம்.
(2) சூரியன் அஸ்தமித்தவுடன் செய்வது மத்யமம்.
(3) நக்ஷத்ரங்கள் காணப்பட்ட பின் செய்வது அதமம்.

இவ்வாறு ஸாயம் ஸந்த்யாவந்தனத்திற்கு மூன்று காலங்கள்.

ப்ராயஶ்சித்தார்க்யம்

உத³யாஸ்தமயாதூ³ர்த்⁴வம் யாவத்ஸ்யாத் க⁴டிகா த்ரயம் |
தாவத் ஸந்த்⁴யாமுபாஸீத ப்ராயஶ்சித்தம் தத: பரம் ||

காலையில் சூரியோதயத்திற்குப் பிறகு மூன்று நாழிகை வரையிலும், மாலையில் சூரியாஸ்தமனத்திற்குப் பிறகு மூன்று நாழிகை வரையிலும் ஸந்த்யாவந்தனம் செய்யலாம். அதற்கு மேற்பட்டால் ப்ராயஶ்சித்தார்க்யம் விடவேண்டும்;

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ப்ராணாயாமமென்பது என்ன ?

திடீரென்று மூக்கை அழுத்தி மந்திரத்தைச் சொல்லி, பிறகு திடீரென்று விரல்களை எடுத்துவிடுவது ப்ராணாயாமம் என்று சிலர் நினைப்பர். அப்படியே சிலர் செய்கிறார்கள்கூட.

ப்ராணாயாமத்தைப்பற்றி நம் சாஸ்திரங்களில் எவ்வளவோ சொல்லப்பட்டிருக்கிறது. சுருக்கமாக 'ப்ராணாயாமம்' என்ற சொல்லுக்கு, கணக்கு வழக்கு இல்லாமல உள்ளும் புறமும் போய்வந்து கொண்டிருக்கும் மூச்சுக் காற்றை நிதானமாக நிறுத்தி, அமைதியாக வெளியில் விடுதல் என்று பொருள். இந்தக் காரியத்தை மூன்றுவிதமாகப் பிரித்தார்கள். அதாவது,

பூரகம் — ஒரு மூக்கை மூடி மற்றொரு மூக்கால் காற்றை உள்ளுக்கு இழுப்பது.

கும்பகம் — அப்படி இழுத்த காற்றை இரண்டு மூக்குகளையும் அழுத்தி உள்ளேயே சற்றுநேரம் நிறுத்துவது.

ரேசகம் — காற்றை உள்ளே இழுத்த மூக்காலல்லாமல் மற்றொரு மூக்கால் மெதுவாக வெளியில் விடுவது.

இந்த ரீதியில் ப்ராணாயாமம் செய்யப் பழக்கிக்கொள்ள வேண்டும்.

ப்ராணாயாம பலன்

ப்ராணாயாமம் சுகவாழ்விற்கு இன்றியமையாதது. அது உடலிலுள்ள ரத்த நாளங்களையெல்லாம் சுத்தம் செய்கிறது. ஞாபக சக்தியை அதிகமாக்குகிறது; தைரியத்தை ஊட்டுகிறது; மனத்தைத் தீய வழிகளில் செல்லவொட்டாமல் தடுக்கிறது; உற்சாகமளிக்கிறது. மற்றும் இத்தகைய எத்தனையோ நற்பலன்களை அளிக்கக்கூடியது ப்ராணாயாமம். ஆகவே, இதைப் பெரியோர்களை அணுகிக் கற்று, சரிவரச் செய்ய வேண்டும்.

அர்க்யம் விடும் முறை

ஜலாஞ்ஜலிம் க்ருஹீத்வா து தர்ஜந்யங்குஷ்ட வர்ஜிதம் |
வீக்ஷ்ய பா நும் க்ஷிபேத்வாரி காயத்ர்யா சாபிமந்த்ரிதம் ||
த்ரிவாரம் முநிஸார்தூல விதிரேஷோர்க்யமோசநே ||
தத: ப்ரதக்ஷிணம் குர்யா தஸாவாதித்ய மந்த்ரத: |
மத்யாஹ்நே ஸக்ருதேவ ஸ்யாத் ஸந்த்யயோஸ்து த்ரிவாரத: ||

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

(கட்டை விரல்களையும், ஆள்காட்டி விரல்களையும் சேர்க்காமல் இரண்டு கைகளிலும் ஜலத்தை எடுத்து சூரியனைப் பார்த்துக்கொண்டே காயத்ரியை ஜபித்து மூன்று அர்க்யம் விடவும். பிறகு, 'அஸாவாதி³த்யோ ப்³ரஹ்மா' என்ற மந்திரத்தினால் பிரதக்ஷிணம் செய்யவும். மத்யாஹ்னத்தில் ஓர் அர்க்யம் விடவேண்டும். காலை மாலை இரு வேளைகளிலும் மும்மூன்று அர்க்யங்கள் விடவேண்டும்.)

அர்க்யம் ஏன் விடவேண்டும்?

த்ரிம்ஶத் கோட்யோ மஹாவீரா மந்தே³ஹாநாம ராக்ஷஸா:
க்ருதக்⁴நா தா³ருணா கோ⁴ரா: ஸூர்யமிச்ச²ந்தி கா²தி³தும் ॥
ததோ தே³வக³ணா: ஸர்வே ரிஷயஶ்ச தபோத⁴நா: ।
உபாஸதே மஹாஸந்த்⁴யாம் ப்ரக்ஷிபந்த்யுத³காஞ்ஜலீந் ॥
த³ஹ்யந்தே தேந தை³த்யாஸ்தே வஜ்ரீபூ⁴தேந வாரிணா ।
ஏதஸ்மாத்காரணாத்³ விப்ரா: ஸந்த்⁴யாம் நித்யமுபாஸதே ॥

(மந்தேஹர் என்று பெயருள்ள முப்பதுகோடி கோர-வீர-க்ரூர ராக்ஷஸர்கள் சூரியன் ஸந்த்யாகாலத்துடன் இணைந்திருக்கும்போது அவனை விழுங்கிவிடவேண்டுமென்று ஓடி வருகிறார்கள். அவர்களிடமிருந்து சூரியனைக் காப்பாற்றுவதற்காக முப்பத்து முக்கோடி தேவர்களும், ரிஷிகளும், தாபஸர்களும் ஸந்த்யாவந்தனம் செய்து அர்க்ய ஜலத்தை விடுகிறார்கள். அந்த அர்க்ய ஜலமானது வஜ்ராயுதங்களாக மாறி, அதனால் மந்தேஹர் என்ற அரக்கர்களை எரிக்கின்றது. இதே காரணத்தால்தான் பிராம்மணர்கள் தினந்தோறும் ஸந்த்யாவந்தனம் செய்கிறார்கள்.)

காயத்ரீ மகிமை

'காயத்ரீ' என்பது ஸந்த்யாவந்தன காலத்தில் ஜபிக்க வேண்டிய ஒரு வேத மந்த்ரம்.

காயத்ரீ என்ற ஸம்ஸ்க்ருதச் சொல்லுக்கு (காயந்தம் + த்ராயத இதி காயத்ரீ) தன்னைப் பாடுபவனை (அதாவது ஜபிப்பவனை)க் காப்பாற்றுவது என்று அர்த்தம். ஆகவே, காயத்ரீமந்த்ர ஜபம் செய்பவனை அந்த காயத்ரீ மந்த்ரம் ஸகல ஆபத்துக்களிலிருந்தும் காப்பாற்றும்.

ஸ்ரீமந் நாராயணன் சிருஷ்டி செய்ய வேண்டுமென்று ஸங்கல்பித்தவுடன் அவனுடைய திருமுகத்திலிருந்து தேவதைகளுள் அக்னியும், மந்திரங்களுள் காயத்ரீ மந்திரமும், ஸாமத்திற்குள் ரதந்தரமென்ற ஸாமமும், பசுக்களில் ஆடும், வர்ணங்களுக்குள் பிராம்மணனும் தோன்றினார்களென்று வேதம் கூறுகிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ப்ராஹ்மண ஜாதியில் பிறந்தவர்களுக்கு காயத்ரீ என்பவள் மூத்த சகோதரி. ஆகவே, சகோதரியை நன்கு ரக்ஷிக்கவேண்டியது நமது கடமை. அவளை ரக்ஷித்தால்அவள் நம்மைக் காப்பாற்றுவாள் என்பதில் சந்தேகம் என்ன?

மற்றும், "க³ாயத்ரீம் ச²ந்த³ஸாம் மாதா" என்பதற்கிணங்க மற்றெல்லா மந்திரங்களுக்கும் தாய்போன்றவள் காயத்ரீ.

அனைத்துமாக உள்ள பகவான், குறிப்பாகச் சில பொருள்களில் மட்டுமே தன்னுடைய தேஜோம்சம் அதிகமாக உள்ளதாக பகவத்கீதையில் குறிப்பிடுகிறார். அவ்வரிசையில், "காய³த்ரீ ச²ந்த³ஸாமஹம்" - வேதமந்திரங்களில் நான் காயத்ரியாக இருக்கிறேன்" என்றார். ஆகவே, மந்திரங்களில் உயர்ந்தது 'காயத்ரியே' என்பதைப் பகவானே சொல்லியிருக்க, மற்றோர் ஆதாரத்தை நாம் மேற்கோளாகக் காட்ட வேண்டிய அவசியமில்லையன்றோ!

காயத்ரீ தேவதையை உபாஸிப்பதால் ஆத்ம சக்தியும், சத்ருக்களை வெல்லும் மனோபலமும், சரீரபலமும், உயர்ந்த தேஜஸும் வளருமென்று வேதம் வற்புறுத்துகின்றது.

தவிர, வேதத்தில் உள்ள மற்ற மந்திரங்களைக் காட்டிலும் 24 அக்ஷரங்களைக்கொண்ட காயத்ரீ மந்திரம் மிகச் சிறியது. உருவத்தில் சிறியதேயாயினும் மகிமையில் உயர்ந்தது.

தினந்தோறும் காயத்ரீஜபம் செய்பவனுக்குப் பூர்வ ஜன்மங்களில் செய்த பாவங்கள் அகலுவதுடன் அந்த அந்த தினத்தில் தெரிந்தோ தெரியாமலோ செய்யும் பாவங்களெல்லாம் நீங்கிவிடுகின்றன. பாவமென்னும் இருட்டு அகன்று ஒளிமயமான வாழ்க்கை ஏற்படுகின்றது. இதை அனுபவத்தில் கண்டறிய வேண்டுமேயன்றி சொற்களால் வரையறுத்துச் சொல்ல முடியாது.

இதுவரை ஸந்த்யாவந்தனமும் காயத்ரீ ஜபமும் செய்யாத ஒருவர், இவைகளைச் செய்தபின் தம் வாழ்க்கை எவ்வித அமைதியுடனும், ஒளியுடனும் நடக்கிறதென்பதைப் பரீக்ஷித்துப் பார்த்துக்கொண்டால் காயத்ரியின் மகிமை நன்கு விளங்கும்.

விசுவாமித்திரர் என்பவர் முதலில் க்ஷத்திரியராக இருந்து காயத்ரீதேவியை உபாஸித்து, ஸித்தியடைந்து, ப்ரஹ்மரிஷியாகி, "நான் ப்ரஹ்மாவாக வேறு சிருஷ்டி செய்கிறேன், வேறு இந்திரனையே படைக்கிறேன்" என்று மார் தட்டினாரே! அது காயத்ரீ சக்தியின் மகிமைக்கொரு சிறந்த உதாரணமாகும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இதை மனத்தில் கொண்டு உபநயனமானவர்கள் எல்லோரும் நூற்றெட்டு தடவையோ, 28 அல்லது 10 தடவையோ தினந்தோறும் மூன்று காலங்களிலும் காயத்ரீ ஜபம் செய்து ப்ரஹ்ம தேஜோ-பலத்தை அடையவேண்டும்.

காயத்ரியை க்ரஹிக்கும் முறை

காயத்ரீ மந்திரத்தைப் புஸ்தகத்தில் படித்து ஜபம் செய்தால் யாதொரு பயனும் இருக்காது. உபநயன காலத்தில் ஆசாரியனாக அமையும் தகப்பனாராவது, மற்ற பெரியவர்கள் யாராவது தனது வலது செவியில் உபதேசிப்பார்கள். பக்தியுடன் அதை வாயால் சொல்லி கிரஹித்து, பிறகு தினந்தோறும் ஜபம் செய்யச் செய்ய சக்தியும் பலனும் ஏற்படும்.

பொதுவாக எந்த மந்திரத்தையும் ஏட்டில் படித்து. இயங்கவைக்க முடியாது என்பதை உணரவேண்டியது அவசியம்.

காயத்ரீ மந்த்ரார்த்தம்

எந்த மந்திரத்தையும் அதன் அர்த்தத்தைத் தெரிந்து கொண்ட பிறகே ஜபம் செய்வது முறை. அம்மாதிரியே காயத்ரீ மந்திரத்தையும் அர்த்தத்தைத் தெரிந்துகொண்டு ஜபம் செய்யவேண்டும்.

" தத்ஸவிதுர்வரேண்யம்-ப⁴ர்கோ³ தே³வஸ்ய
தீ⁴மஹி-தி⁴யோ யோ ந: ப்ரசோத³யாத் "

என்பது காயத்ரீ மந்த்ரம். 'ஓம்' என்ற ப்ரணவத்தையும் 'பூ⁴ர்பு⁴வஸ்ஸுவ:' என்ற வ்யாஹ்ருதியையும் முதலில் சொல்லிய பிறகே இந்த காயத்ரீ மந்த்ரத்தைச் சொல்ல வேண்டும். ப்ரணவம் பகவானைக் குறிக்கிறது, வ்யாஹ்ருதியும் பூலோக—புவர்லோக—ஸுவர்லோக வடிவிலுள்ள பகவானைக் குறிக்கும். இனி பொருளுக்கேற்றவாறு காயத்ரீ மந்திரத்தின் பதங்களை வரிசைப்படுத்தி அப்பொருளைக் கூறுவோம் :—

ய: = எவர்
ந: = நம்முடைய
தி⁴ய: = புத்தியை
ப்ரசோத³யாத் = தூண்டுகிறாரோ
தத் = அப்படிப்பட்ட
தே³வஸ்ய = ஒளிமிக்கவரான
ஸவிது: = (உலகைப் படைத்தவருடைய) ஸூரிய[னுடைய
வரேண்யம் = மிகவும் உயர்ந்ததான

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ப⁴ர்க³: = தேஜஸ்ஸை
தீ⁴மஹி = த்யானம் செய்கிறோம்

அதாவது, "நமது புத்தியை இயங்கச் செய்யும் சூரிய நாராயணனை நாம் வணங்குவோம்" என்பது சுருக்கமான பொருள்.

ஆகவே, காயத்ரீ மந்திர ஜபம் செய்யும்பொழுது சக்தி வடிவாகிய காயத்ரீ தேவியையும், சூரிய பகவானையும் நம் மனக்கண் முன் இருத்தி, பக்தியுடன் பணியும் பாவனையுடன் ஜபம் செய்தால் ஸகல கார்யஜயமும், ப்ரஹ்மதேஜஸூம் உண்டாகும்.

காயத்ரியை எண்ணும் முறை

அநாமிகா மத்⁴யதே³ஶாத் அதே⁴ா வாமக்ரமேண ச ।
தர்ஜநீமூல பர்யந்தம் ஜபஸ்யைவம் க்ரம: கரே ॥
—தேவீ பாகவதம் 26–அ. 18-19 சு.

மோதிரவிரல் நடுக்கோட்டிலிருந்து ஆரம்பித்துக்கீழிறங்கி சுண்டுவிரல் மூன்று கணுக்கள் வழியாக மேற்கணுக்களை எண்ணி ஆட்காட்டிவிரல் அடிக்கோடுவரை எண்ண 10 ஆகும்.

காயத்ரீ ஜபம் செய்யும் முறை

பஞ்ச ப்ரணவஸம்யுக்தாம் ஜபேதி³த்யநுஶாஸநம் ।
ஜபஸங்க்²யாஷ்ட ப⁴ாக³ாந்தே பாதே³ா ஜப்யஸ்துரீயக: ॥

ப்ரணவத்தைச் சேர்த்து காயத்ரியைப் பஞ்சபதமாக, அதாவது,

(1) ஓம்
(2) பூ⁴ர்ப்பு⁴வஸ்ஸுவ:
(3) தத்ஸவிதுர்வரேண்யம்
(4) ப⁴ர்கே³ா தே³வஸ்ய தீ⁴மஹி
(5) தி⁴யோ யோ ந: ப்ரசோத³யாத்

என்று ஐந்து இடத்தில் (மூச்சைவிட்டு) நிறுத்தி ஜபம் செய்ய வேண்டும். அவசர அவசரமாக எல்லாவற்றையும் சேர்த்து மூச்சு விடாமல் ஜபம் செய்தால் எவ்விதப் பயனும் ஏற்படாது.

முறை தவறி 1008 தடவை ஜபம் செய்வதைக் காட்டிலும், முறையுடன் 28 தடவை ஜபம் செய்தாலே போதும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V.Hariharan Collection, Sholinganallur, Chennai

பொதுக் குறிப்புகள்

பொதுவாக இப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள் நகரங்களில் தம்தம் க்ருஹங்களில் பஞ்ச பாத்ரத்தில் ஜலத்தை வைத்துக்கொண்டு செய்பவர்களை மனத்திற் கொண்டே கொடுக்கப்பட்டிருக்கின்றன. நதி, குளம் முதலிய தீர்த்தங்களில் செய்ய நேரும் ஸமயங்களிலும் க்ருஹங்களில் செய்யும் ஸமயங்களிலும் உபயோகமாக இருக்கும்பொருட்டு பின்வரும் குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஸாதாரணமாக ஸந்த்யாவந்தனங்களை இரண்டு பாகங்களாகப் பிரிக்கலாம்.

1. ஜலத்தினுல் செய்யப்படவேண்டிய ஆசமனம், ப்ரோக்ஷணம் (மார்ஜனம்), அர்க்யம் முதலியவை.

2. பூமியில் செய்யப்படவேண்டிய காயத்ரீ ஜபம், உபஸ்தானம் முதலியவை.

முதல்பாகத்தை நதியிலோ, குளத்திலோ (அல்லது வேறுவிதமான தீர்த்தங்களிலோ) செய்யும்போது முழங்கால் மறையும் அளவு ஆழமுள்ள ஜலத்தில் நின்றுகொண்டு செய்யவேண்டும்.

இரண்டாம் பாகமான காயத்ரீ ஜபம் முதலியவற்றை காலையில் நக்ஷத்ரங்கள் தெரியும்போது கிழக்கு நோக்கி நின்றுகொண்டும், ஸாயங்காலத்தில் நக்ஷத்ரங்கள் தெரியும் வரை மேற்கு நோக்கி உட்கார்ந்துகொண்டும், மத்யான்னத்தில் திறந்த வெளியில் செய்வதானுல் வடக்கு நோக்கி நின்று கொண்டும், வீட்டுக்கு உள்ளே செய்வதானுல் உட்கார்ந்து கொண்டும் செய்யவேண்டும்.

காலையில் 5-லிருந்து 6-மணியும், மத்தியான்னம் 11–12 மணியும், ஸாயங்காலம் 6-7 மணியும் இவற்றைச் செய்வதற்குச் சரியான காலம் ஆகும்.

உத்யோகஸ்தர்கள் காலையில் ஸந்த்யாவந்தனம் செய்த உடனே மாத்யாஹ்னிகத்தையும் செய்துவிடலாம். ஸாயங்காலத்தில் வீடு சேர்ந்ததும் ஸந்த்யாவந்தனம் செய்ய வேண்டும்.

கோயில், குளம், கிணறு, தோட்டம், மேல்மாடி போன்ற திறந்த வெளியிடங்களில், அதாவது மனதுக்கு நிம்மதியும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உற்சாகமும் தரும் இடங்களில் ஸந்த்யாவந்தனம் செய்வது உத்தமம். வீட்டுக்குள்ளும் சுத்தமான இடங்களில் உட்கார்ந்து செய்யலாம்.

அவரவர் பெரியோர்கள் தரித்தபடி விபூதி, சந்தனம் முதலியவைகளை நெற்றியிலும், உடலின் பாகங்களிலும் தரித்துக்கொள்ள வேண்டும்.

கை கால்களைச் சுத்தமாகக் கழுவிக்கொண்டு ஸந்த்யாவந்தனம் தொடங்க வேண்டும்.

ஸந்த்யாவந்தனம் செய்யும்போது அவசியமில்லாமல் யாருடனும் பேசக்கூடாது.

மற்ற விதிகளையும் வேறுபாடுகளையும் அவரவர் ஸம்பிரதாயத்துப் பெரியோர்களை அணுகித் தெரிந்துகொள்வது நல்லது.

ஆசமனத்தைப்பற்றிய பொது விதிகள்

உட்கொள்ளும் ஜலம் ஹ்ருதயத்தில் போய்ச் சேர வேண்டும்.

ஜலத்தை உறிஞ்சி உட்கொள்ளக்கூடாது.

குழாய் போன்று தாரையாக மேலிருந்து விழும் ஜலத்தில் ஆசமனம் செய்யக்கூடாது.

ஸமுத்திர ஜலத்தில் ஆசமனம் செய்யக்கூடாது.

மும்முறை ஜலத்தை உட்கொண்டவுடன் இரண்டு முறை வாயைத் துடைத்துக் கையை அலம்பிக்கொள்ள வேண்டும்.

நதி, குளம் முதலிய தீர்த்தங்களில் ஆசமனம் செய்யும் போது இடது கையால் ஜலத்தைத் தொட்டுக்கொண்டு ஆசமனம் செய்யவேண்டும். உட்கார்ந்துகொண்டும் ஆசமனம் செய்யலாம். அப்படிச் செய்வதானால் வலது காலைக் கரையிலும் இடது காலை ஜலத்திலும் வைத்துக்கொண்டு இடது கையால் ஜலத்தைத் தொட்டுக்கொண்டு செய்யவேண்டும்.

வீடுகளில் ஸந்த்யாவந்தனம் செய்யும்போது கால்களைக் குந்திட்டு (ப்ருஷ்டபாகம் தரையில் படாமல்) உட்கார்ந்து கொண்டு, இரு கரங்களின் முழங்கைப்பாகமும் கால்களுக்கு நடுவில் இருக்கிற மாதிரி வைத்துக்கொண்டு ஆசமனம் செய்யவேண்டும். சுண்டு விரலையும் மோதிர விரலையும் மட்டும் நீட்டி மற்ற மூன்று விரல்களையும் சிறிது மடக்கி உள்ளங்கையில் குழிவு ஏற்படும்படி செய்து அதில் உளுந்து முழுகும் அளவு தீர்த்தம் எடுத்து மூன்று மந்திரங்களையும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தனித்தனியே உச்சரித்து மூன்றுமுறை உட்கொள்ள வேண்டும்.

ஸங்கல்பத்தைப்பற்றிய பொது விதிகள்

ஸங்கல்பம் செய்வதற்குக் கால்களைச் சப்பளம் போட்டு உட்கார்ந்துகொண்டு வலது துடையின்மேல் இடது கையை வைத்து, வலது உள்ளங்கை இடது உள்ளங்கையைத்தொடும் படி வைத்துக்கொள்ள வேண்டும்.

ஜலத்தில் இருந்துகொண்டு ஸங்கல்பம் செய்யும்போது வலது காலைத் தூக்கி கரைமேல் வைத்து (இடது காலை ஜலத்திலேயே வைத்துக்கொண்டு) மேலே கூறியுள்ளபடி வலது துடையின்மேல் கைகளை வைத்துக்கொண்டு ஸங்கல்பம் செய்யவேண்டும்.

ப்ரோக்ஷணத்தைப்பற்றிய பொது விதிகள்

உள்ளங்கையில் ஜலத்தை எடுத்து விரல்கள் மூலமாக சிரஸில் ப்ரோக்ஷித்துக் கொள்ளவேண்டும்.

நதி, குளம் முதலிய தீர்த்தங்களில் ப்ரோக்ஷித்துக் கொள்ளும்போது இடது கை ஜலத்தைத் தொட்டுக்கொண்டிருக்க வேண்டும்.

மந்திரத்தை ஜபித்துக்கொண்டே ஜலத்தை ப்ரோக்ஷித்துக் கொள்ளவேண்டும்.

மந்த்ரத்தை உச்சரிக்காமல் ஜலத்தை மட்டும் ப்ரோக்ஷித்துக்கொண்டாலும், மந்த்ரத்தை மாத்திரம் உச்சரித்துக் கொண்டு ஜலம் படாமலேயே ப்ரோக்ஷித்துக் கொள்ளுவது போல் கையை அசைத்தாலும் பலன் தராது.

க்ருஹங்களில் பஞ்சபாத்திரத்தில் தீர்த்தத்தை வைத்துக் கொண்டு செய்யும்போதும் முதலில் உள்ளங்கையில் தீர்த்தத்தை எடுத்துக்கொண்டு பிறகு விரல்களால் ப்ரோக்ஷித்துக் கொள்ளவேண்டும்.

அர்க்யத்தைப்பற்றிய பொது விதிகள்

அவரவர் வீட்டில் ஸந்தியாவந்தனம் செய்தாலும், நதி அல்லது குளத்தில் செய்தாலும் நின்றுகொண்டுதான் அர்க்யம் விடவேண்டும்.

அர்க்யம் விடும்போது குதிகால்களைச் சிறிது மேலே உயர்த்தவேண்டும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

க்ருஹங்களில் பஞ்சபாத்ரத்தை வைத்துக்கொண்டு ஸந்த்யாவந்தனம் செய்பவர்கள் இடது கையின் ஆள்காட்டி விரலுக்கும் கட்டை விரலுக்கும் நடுவில் பாத்ரத்தை இடுக்கி பிடித்துக்கொண்டு இரண்டு கைகளாலும் அர்க்யம் விட வேண்டும்.

கேசவாதி தர்ப்பணத்தைப்பற்றிய பொது விதிகள்

கேசவாதி நாமங்களைச் சொல்லி ஜலத்தை விடும்போது அர்க்யம் விடுவதற்கு வைத்துக்கொள்கிறமாதிரியே கையை சேர்த்து வைத்துக்கொண்டு ஜலத்தைக் கையில் எடுத்துவி வேண்டும். ஆனால் அர்க்யம் விடுவதுபோல் உயரத் தூக் விடவேண்டுமென்பதில்லை. ஆனால் கைகளை மாத்திரம் அ மாதிரி சேர்த்து வைத்துக்கொண்டு இரண்டு கைகளாலு ஜலத்தை எடுத்து நுனிவிரல்களால் ஜலத்தைக் கீழே விடவு

சரியான உச்சரிப்பு

மந்த்ரங்கள் ஸம்ஸ்கிருத பாஷையில் இருக்கின்ற ஸம்ஸ்கிருத பாஷையை எழுதுவதற்குத் தமிழில் போத எழுத்துக்கள் இல்லை. உதாரணமாக, 'க' என்ற எழுத்து வெவ்வேறு உச்சரிப்புடன் ஸம்ஸ்கிருத பாஷையில நான் இருக்கின்றன. ஆகவே, தமிழ் மாத்திரம் தெரிந்தவர்கள ஸம்ஸ்கிருதத்தைத் தக்கபடி உச்சரிக்க, இப்புத்தகத்தில்அ அந்த எழுத்துக்களின்மீது குறிப்பிட்டுள்ளபடி 2,3,4 என்று ..றி இடப்பட்டிருக்கிறது. இதை நன்கு கவனித்து உச்சரி ..வண்டும்.

மற்றும், "ஶ" (ச) என்னும் எழுத்து ஆங்காங்கு சேர்க் பட்டிருக்கிறது. சாந்தி, சிவன் முதலிய இடங்களில் ந உச்சரிக்கும் உச்சரிப்புப் போன்றவைக்காகத்தான் மே கண்ட 'ஶ' எழுத்து சேர்க்கப்பட்டிருக்கிறது.

வேத மந்திரங்களுக்கு உச்சரிப்பு எப்படிச் சுத்தம இருக்கவேண்டுமோ, அப்படியே ஸ்வரமும் முக்கியமான மந்திரங்களில் உச்சரிக்கவேண்டிய ஸ்வரங்களைக் கு மூலமாகத் தெரிந்துகொள்வது அவசியம். அப்படிக் கற் மந்திரங்களை மறந்து விடாமலிருக்கவும், மற்றப் பிரயோக களை அறிவதற்கும் இப்புத்தகம் மிகவும் பயன்படும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீரஸ்து

த்ரிவேதி

ஸ்மார்த்த ஸந்த்யாவந்தனம்

காலை ஸந்த்யாவந்தனம்

---

1. ஆசமனம்

காலையில் ஸ்நானம் செய்தபின், கிழக்கு முகமாகவோ வடக்கு முகமாகவோ குந்திட்டு உட்கார்ந்து, கைகளை முழங்கால்களுக்குள்ளே வைத்துக்கொண்டு சுண்டு விரலையும் மோதிர விரலையும் நீட்டி, மற்ற விரல்களைச் சற்று உட்புறம் மடிக்க, பள்ளமாக அமையும்.

அத்தகைய உள்ளங்கையில் சிறிது ஜலம் எடுத்துக்கொண்டு கீழ்க்கண்ட மந்திரங்கள் ஒவ்வொன்றையும் சொல்லி உட்கொள்ளவேண்டும்:

(1) ஓம் அச்யுதாய நம:

(2) ஓம் அநந்தாய நம:

(3) ஓம் கோவிந்தாய நம

பிறகு ஜலத்தால் இருமுறை உதட்டைத் துடைத்துக் கையை அலம்பிக்கொண்டபின், கீழ்க்கண்ட மந்திரங்களைச் சொல்லி அந்த அந்த விரலால் உடலின் அந்த அந்தப் பாகங்களைத் தொட வேண்டும்.

ஓம் கேஶவ	கட்டைவிரல்	வலது கன்னம்
ஓம் நாராயண	,,	இடது கன்னம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஓம்	மாத4வ	பவித்திர விரல்	வலது கண்
,,	கோ3விந்த3	,,	இடது கண்
,,	விஷ்ணோ	ஆள்காட்டி விரல்	வலது மூக்கு
,,	மது4ஸூத3ந	,,	இடது மூக்கு
,,	த்ரிவிக்ரம	சுண்டுவிரல்	வலது காது
,,	வாமந	,,	இடது காது
,,	ஸ்ரீத4ர	நடுவிரல்	வலது தோள்
,,	ஹ்ருஷீகேஶ	,,	இடது தோள்
,,	பத்3மநாப4	எல்லா விரல்கள்	மார்பு
,,	தா3மோத3ர	,,	தலை

இவ்வாறு இரண்டு முறைகள் ஆசமனம் செய்தபிறகு,

ஶுக்லாம்ப3ரத4ரம் விஷ்ணும் ஶஶிவர்ணம் சதுர்பு4ஜம் ।
ப்ரஸந்நவத3நம் த்4யாயேத் ஸர்வ விக்4நோபஶாந்தயே ॥

என்று சொல்லி தலையில் இருபுறமும் ஐந்து தடவை குட்டிக் கொள்ளவும்.

2. ப்ராணாயாமம்

பிறகு, நடுவிரலையுட ஆள் காட்டி விரலையும் மடித்து, கட்டை விரலால் வலது மூக்கை அழுத்திப் பிடித்துக்கொண்டு, கீழ்க்கண்ட மந்த்ரத்தை மனத்தில் உச்சரித்துக் கொண்டே மூச்சுக் காற்றை உள்ளிழுத்து, சுண்டு விரல் பவித்திர விரல்களால் இடது மூக்கை அழுத்தி, பிறகு வலது மூக்கால் மெதுவாகக் காற்றை வெளியில் விட்டு, பிறகு வலது காதைத் தொட வேண்டும். மந்த்ரம்:—

"ஓம் பூ4:—ஓம் பு4வ:—ஓம் ஸுவ:—ஓம் மஹ:—ஓம் ஜந:— ஓம் தப:— ஓம் ஸத்யம் — ஓம் தத்ஸவிதுர்வரேணியம் —ப4ர்கோ3 தே3வஸ்ய் த்4மஹி — தி4யோ யோ ந: ப்ரசோத3யாத் — ஓமாப: —ஜ்யோதீ ரஸ: — அம்ருதம் ப்3ரஹ்ம—பூ4ர்பு4வஸ்ஸுவ ரோம்."

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

3. ஸங்கல்பம்

பிறகு, படத்தில் உள்ளதுபோல் இடது கையை வலது தொடைமீது மல்லாத்தி, அதன்மீது வலது கையை வைத்து,

"மமோபாத்த ஸமஸ்த து3ரித க்ஷயத்3வாரா பரமேஶ்வர ப்ரீத்யர்த2ம் ப்ராதஸ் ஸந்த4யாம் உபாஸிஷ்யே"

என்று ஸங்கல்பம் செய்யவேண்டும்.

பிறகு 'ஓம்' என்று ஜலத்தில் எழுதி,

"ஓம் ஸ்ரீகேஶவாய நம:"

என்று சொல்லி, புருவ மத்தியில் அந்த ஜலத்தைத் தடவிக்கொள்ள வேண்டும்.

4. ப்ரோக்ஷணம்

கீழ்க்கண்ட வாக்கியங்களைச் சொல்லி கைவிரல்களால் அந்த அந்த இடத்தைத் தொடவும். இதற்கு "ந்யாஸம் என்று பெயர்.

ஆபோஹிஷ்டே2தி மந்த்ரஸ்ய
ஸிந்து4த்3வீப ரிஷி: (தலை)
தே3வீ க3ாயத்ரீ ச2ந்த3: (மூக்கு நுனி)
ஆபோ தே3வதா (மார்பு)
மார்ஜநே விநியோக3: ।

பிறகு, கீழ்க்கண்ட மந்திரத்தைச் சொல்லி விரல்களால் தலையில் ஜலத்தைப் புரோக்ஷித்துக்கொள்ளவேண்டும்:

"ஆபோ ஹிஷ்டா2 மயோ பு4வ:—தா ந ஊர்ஜே த3தா4தந—மஹேரணாய சக்ஷஸே—யோவ: ஶிவதமோ ரஸ:—தஸ்ய பா4ஜயதேஹ ந:—உஶதீரிவ மாதர:—தஸ்மா அரங்க3மாம வ:—

என்று புரோக்ஷித்து, பிறகு,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

'யஸ்ய க்ஷயாய ஜிங்வத²'

என்பதால் இரு பாதங்களின்மீதும் ப்ரோக்ஷித்துக்கொண்டு, பிறகு

'ஆபோ ஜநயத²ா ச ந:'

என்பதால் தலைமீது ப்ரோக்ஷித்துக் கொள்ள வேண்டும். பிறகு,

"ஓம் பூ⁴ர்பு⁴வஸ்ஸுவ:'.

என்று தலையைச் சுற்றிலும் பிரதக்ஷிணமாக ஜலத்தைச் சுற்ற வேண்டும். பிறகு,

5. ப்ராசநம்

ஸூர்யஶ்சேத்யநுவாகஸ்ய, அக்³நி ரிஷி: — தே³வீ கா³யத்ரீ ச²ந்த³:—ஸூர்யோ தே³வதா—அபாம் ப்ராஶநே விநியோக³:॥

என்று ந்யாஸம் செய்து, பிறகு உள்ளங்கையில் சிறிது தீர்த்தம் எடுத்துக்கொண்டு, கீழ்க்கண்ட மந்திரத்தை ஜபித்து உட்கொள்ள வேண்டும் :

* "ஸூர்யஶ்ச — மாமந்யுஶ்ச—மந்யுபதயஶ்ச—மந்யுக்ருதேப்⁴ய: — பாபேப்⁴யோ ரக்ஷந்தாம் — யத்³ ராத்ர்யா பாபமகார்ஷம் — மநஸா வாசா ஹஸ்தாப்⁴யாம்—பத்³ப்⁴யா முத³ரேண ஶிஶ்நா—ராத்ரிஸ்—தத³வலும்பது—யத்கிஞ்ச து³ரிதம் மயி — இத³ மஹம் மா மம்ருத யோநௌ—ஸூர்யே ஜ்யோதிஷி ஜுஹோமி ஸ்வாஹா"

பிறகு இரண்டு முறை ஆசமனம் செய்யவும்.

6, புநர் மார்ஜநம்

த³தி⁴க்ராவ்ண்ண இதி மந்த்ரஸ்ய, வாமதே³வ ரிஷி:—அநுஷ்டுப் ச²ந்த³:—விஶ்வேதே³வா தே³வதா: — மார்ஜநே விநியோக³:

என்று ந்யாஸம் செய்து கீழ்க்கண்ட மந்த்ரத்தால் தலையில் ப்ரோக்ஷித்துக்கொள்ளவேண்டும்.

---

* ஸாமவேதிகள்:

"அஹஶ்ச மா ஆதி³த்யஶ்ச புநாது ஸ்வாஹா"

என்று மட்டும் சொல்லி ப்ராசனம் செய்யவும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

“த3தி4க்ராவ்ணோ அகாரிஷம் — ஜிஷ்ணோரஶ்வஸ்ய வாஜின: — ஸுரபி4 நோ முக2ாகரத் — ப்ரண ஆயூம்ஷி தாரிஷத் — ஆபோ ஹிஷ்டா2 மயோபு4வ: — தாந ஊர்ஜே த3தா4தந—மஹேரணாய சக்ஷஸே — யோவஶ் ஶிவதமோ ரஸ:—தஸ்ய பா4ஜயதேஹ ந:—உஶதீரிவ மாதர:—தஸ்மா அரம்க3மாம வ:”

என்று (11 தடவை) தலையில் புரோக்ஷித்துக்கொண்டு,

யஸ்ய க்ஷயாய ஜின்வத2”

என்று பாதங்களிலும்,

“ஆபோ ஜநயதா2 ச ந:”

என்று தலையிலும் புரோக்ஷிக்கவும். பிறகு,

“பூ4ர்பு4வஸ்ஸுவ:”

என்று சொல்லி, ஜலத்தால் தலையை ப்ரதக்ஷிணமாகச் சுற்றிக் கொள்ள வேண்டும். பிறகு,

7. அர்க்ய ப்ரதானம்

“கா3யத்ர்யா ரிஷி: விஶ்வாமித்ர: — நிச்ருத்3 கா3யத்ரீ ச2ந்த3: — ஸவிதா தே3வதா—அர்க்4ய ப்ரத3ா நே விநியோக3:’

என்று ந்யாஸம் செய்து,

இரண்டு கைகளையும் சேர்த்து நிறைய ஜலத்தை எடுத்துக்கொண்டு கீழ்க்கண்ட மந்த்ரத்தைச் சொல்லி, குதிகால்களைச் சற்று உயரத் தூக்கி, சூரியனைப் பார்த்து மூன்று அர்க்யம் விட வேண்டும்.



“ஓம் பூ4ர்பு4வஸ்ஸுவ:-தத்ஸவிதுர் வரேண்யம்—ப4ர்க்கோ3 தே3வஸ்ய தீ4மஹி—தி4யோ யோ ந: ப்ரசோத3யாத்”

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

8. ப்ராயச்சித்தார்க்யம்

ஒரு ப்ராணாயாமம் செய்து,

"காலாதீதப்ராயஶ்சித்தார்க்⁴யம் கரிஷ்யே"

என்று ஸங்கல்பித்து,

க³ாயத்ர்யா ரிஷி: விஶ்வாமித்ர: — தே³வீக³ாயத்ரீ சந்த³: — ஸவிதா தே³வதா। ப்ராயஶ்சித்தார்க்⁴ய ப்ரத³ாநே விநியோக³:

என்று ந்யாஸம் செய்த பிறகு, கைகளில் தீர்த்தம் எடுத்துக் கொண்டு,

"ஓம் பூ⁴: ஓம் பு⁴வ:, ஓம் ஸுவ:– ஓம் மஹ:,– ஓம் ஜந: ஓம் தப:—ஓம் ஸத்யம்—ஓம் தத்ஸவிதுர்வரேணியம்—ப⁴ர்கோ³ தே³வஸ்ய தீ⁴மஹி–தி⁴யோ யோ ந: ப்ரசோத³யாத்- ஓமாபோ ஜ்யோதீ ரஸோ–அம்ருதம் ப்ரஹ்ம பூ⁴ர்பு⁴வஸ் ஸுவரோம்"

என்று ஓர் அர்க்யம் விடவும்.

பிறகு கையில் ஜலமெடுத்துக்கொண்டு, தன்னைத்தானே பிரதக்ஷிணமாகச் சுற்றி,

"அஸாவாதி³த்யோ ப்³ரஹ்ம, ப்³ரஹ்மைவாஹமஸ்மி"

ஸாமவேதிகளுக்கும், ரிக்வேதிகளுக்கும் ப்ராயச்சித்தார்க்யம்

ப்ராணாயாமம் செய்து,

"காலாதீத ப்ராயஶ்சித்தார்க்⁴ய தாநம் கரிஷ்யே"

என்று ஸங்கல்பித்து,

யத³த்³யேத்யஸ்ய மந்த்ரஸ்ய, ஶௌநக ரிஷி:—க³ாயத்ரீ சந்த³: — ஸூர்யோ தே³வதா — ப்ராயஶ்சித்தார்க்⁴யத³ாநே விநியோக³:॥

என்று ந்யாஸம் செய்து,

"யத³த்³யகச்ச வ்ருத்ரஹந் — உத³க³ா அபி⁴ஸூர்ய- ஸர்வம் ததி³ந்த்³ர தே வஶே"

என்று சொல்லி அர்க்யம் விட்டு, ஆசமனம் செய்யவும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

என்று சொல்லி இரு கைகளாலும் மார்பைத் தொட்டுக்கொண்டு, ஸூரியனைப் ப்ரஹ்மமாகவும் தானும் ப்ரஹ்மமே என்றும் த்யானிக்கவேண்டும்.

பிறகு இரண்டு ஆசமனம்.

9. நவக்ரஹ கேசவாதி தர்ப்பணம்

இரு கைகளிலும் ஜலத்தை எடுத்துக்கொண்டு கீழ்க்கண்ட மந்திரங்களைச் சொல்லி, ஸூரியனைப் பார்த்து ஜலத்தைக் கீழே விடவும் :

ஆதி³த்யம் தர்ப்பயாமி
ஸோமம் தர்ப்பயாமி
அங்க³ாரகம் தர்ப்பயாமி
பு³த⁴ம் தர்ப்பயாமி
ப்³ருஹஸ்பதிம் தர்ப்பயாமி
ஶுக்ரம் தர்ப்பயாமி
ஶனைஶ்சரம் தர்ப்பயாமி
ராஹும் தர்ப்பயாமி
கேதும் தர்ப்பயாமி
கேஶவம் தர்ப்பயாமி
நாராயணம் தர்ப்பயாமி
மாத⁴வம் தர்ப்பயாமி
கோ³விந்த³ம் தர்ப்பயாமி
விஷ்ணும் தர்ப்பயாமி
மது⁴ஸூத³நம் தர்ப்பயாமி
த்ரிவிக்ரமம் தர்ப்பயாமி
வாமநம் தர்ப்பயாமி
ஶ்ரீத⁴ரம் தர்ப்பயாமி
ஹ்ருஷீகேஶம் தர்ப்பயாமி
பத்³மநாப⁴ம் தர்ப்பயாமி
தா³மோத³ரம் தர்ப்பயாமி

பிறகு ஒரு தடவை ஆசமனம்.

CC0. In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

10. ஜப விதி*

சுத்தமான இடத்தில் கிழக்கு முகமாக நின்று தீர்த்த பாத்ர
தை எதிரில் வைத்துக்கொண்டு,

ப்ருதி2வ்யா: மேருப்ருஷ்ட2
ருஷி:—அதலம் ச2ந்த3: — கூர்மோ
தே3வதா–ஆஸநே விநியோக3:॥

என்று ந்யாஸம் செய்து,

ப்ருத்2வி த்வயா த்4ருதா லோகா:
தே3வி த்வம் விஷ்ணுநா தத2ா।
த்வம் ச த3ாரய மாம் தேவி
பவித்ரம் குரு சாஸநம்॥

என்று பூமியைக் கைகூப்பி பிரார்த்தித்த பிறகு,

ஶுக்லாம்ப3ரத4ரம் விஷ்ணும்
ஶஶிவர்ணம் சதுர்பு4ஜம் ।
ப்ரஸந்நவத3நம் த்4யாயேத்
ஸர்வவிக்4நோப ஶாந்தயே ॥

ப்ராணாயாமம் (ஓம்பூ4:, ஓம்பு4வ:, ஓம் ஸுவ:, ஓம் மஹ
ஓம் ஜந:, ஓம் தப:, ஓம் ஸத்யம், ஓம் தத்ஸவிதுர் வரேணிய
ப4ர்கே3ா தே3வஸ்ய தீ4மஹி, தி4யோ யோந: ப்ரசோத3யா
ஓமாபோ ஜ்யோதீ ரஸோऽம்ருதம் ப்ரஹ்ம பூ4ர்பு4வஸ் ஸு
ரோம்).

மமோபாத்த ஸமஸ்த து3ரிதக்ஷய த்3வாரா ஸ்ரீப
மேஶ்வர ப்ரீத்யர்த2ம் ப்ராதஸ்ஸந்த்4யா க3ாயத்ரீ மஹ
மந்த்ர ஜபம் கரிஷ்யே,

என்று ஸங்கல்பம் செய்து,

11. ந்யாஸம்

ப்ரணவஸ்ய ரிஷிர் ப்ரஹ்மா—தே3வீக3ாயத்ரீ ச2ந்த3:
பரமாத்மா தே3வதா ।

* (ஸாமவேதி ஜபவிதிகளை 25, 26, பக்கங்களில் பார்க்கவும்.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"பூ⁴ராதி³ஸப்தவ்யாஹ்ருதீநாம் — அத்ரி ப்⁴ருகு³ குத்ஸ வஸிஷ்ட² கௌ³தம காஶ்யப ஆங்கி³ரஸா: ரிஷய:—க³ாயத்ரீ உஷ்ணிக் அநுஷ்டுப் ப்³ருஹதீ பங்க்தி த்ருஷ்டுப் ஜக³த்ய: ச²ந்த³ாகு³ம்ஸி—அக்³நிவாயு அர்க்க வாகீ³ஶ வருண இந்த்³ர விஶ்வேதேவா: தே³வதா:"

என்று ந்யாஸம் செய்து,

"ஓம் பூ⁴:, ஓம் பு⁴வ: ஓம் ஸுவ:, ஓம் மஹ:, ஓம் ஜந:, ஓம் தப:, ஓம் ஸத்யம், ஓம் தத்ஸவிதுர்வரேணியம், ப⁴ர்கோ³ தே³வஸ்ய தீ⁴மஹி, தி⁴யோ யோ ந: ப்ரசோத³யாத், ஓம: போ ஜ்யோதீரஸோம்ருதம் ப்³ரஹ்ம பூ⁴ர்பு⁴வஸ்ஸுவரோம்"

என்னும் மந்த்ரத்தைச் சொல்லி 10 ப்ராணாயாமம் செய்ய வேண்டும். பிறகு,

ஆயாத்வித்யநுவாகஸ்ய வாமதே³வரிஷி:—அநுஷ்டுப் ச²ந்த³:—கா³யத்ரீ தே³வதா—ஆவாஹநே விநியோக³:

என்று ந்யாஸம் செய்து,

ஆயாது வரதா³தே³வி அக்ஷரம் ப்ரஹ்மஸம்மிதம் ।
க³ாயத்ரீம் ச²ந்த³ஸாம் மாதேத³ம் ப்³ரஹ்ம ஜுஷஸ்வ ந: ॥

ஓஜோஸி ஸஹோஸி—ப³லமஸி ப்⁴ராஜோஸி—
தே³வாநாம் தா⁴மநாமாஸி—விஶ்வமஸி விஶ்வாயு:—
ஸர்வமஸி ஸர்வாயு:—அபி⁴பூ⁴ரோம் க³ாயத்ரீம்
ஆவாஹயாமி

ஸாவித்ர்யா ரிஷி: விஶ்வாமித்ர: — நிச்ருத் காயத்ரீ ச²ந்த³:—ஸவிதா தே³வதா—ஜபே விநியோக³:॥

என்று ந்யாஸம் செய்து.

ஸாமவேதிகள் ஜப விதி

ஆப்³ரஹ்மலோகாத் ஆஶேஷாத் ஆலோகா லோகபர்வதாத்
யே வஸந்தி த்³விஜா தே³வா: தேப்⁴யோ நித்யம் நமோநம: ॥
யஸ்யாஜ்ஞயா ஜக³த்ஸ்ரஷ்டா விரிஞ்ச: பாலகோ ஹரி: ।
ஸம்ஹர்தா காலருத்³ராக்²ய: நமஸ்தஸ்மை பிநாகிநே ॥

ஆஸநமந்த்ரஸ்ய ப்ருதி²வ்யா மேருப்ருஷ்ட²ரிஷி: ஸுதலம் ச²ந்த³:—கூர்மோதே³வதா—ஆஸநே விநியோக³: ।
ப்ருத்²வி த்வயா த்⁴ருதா லோகா தே³வி த்வம் விஷ்ணுநா

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



முக்தாவித்3ரும ஹேம நீலத4வளச்
சாயைர் முகை2ஸ்த்ரீக்ஷணை:
யுக்தாமிந்து3கலாநிப3த்3த4 மகுடாம்
தத்வார்த்3வர்ணாத்மிகாம் ।
கா3யத்ரீம் வரதா3ப4யாங்குஶகஶா:
ஶுப்4ரம் கபாலம் கு3ணம்
ஶங்க2ம் சக்ரமத2ாரவிந்த3 யுக3ளம்
ஹஸ்தைர் வஹந்தீம் ப4ஜே ॥

யோதே3வ: ஸவிதாஸ்மாகம்
தி4யோ த4ர்மாதி3கோ3சரா: ।
ப்ரேரயேத் தஸ்ய யத்3ப4ர்க3:
தத்3வரேண்ய முபாஸ்மஹே ॥

என்று சொல்லிய பிறகு,

காயத்ரீ ஜபம்

"ஓம்பூர் பு4வஸ்ஸுவ: — தத்ஸவி துர் வரேண்யம்—ப4ர்கோ தே3வஸ்ய தீ4மஹி—தி4யோ யோ ந: ப்ரசோத3யாத்"

என்று 108 தடவை, அல்லது 28 தடவை சௌகரியம்போல் காயத்ரீமந்திர ஜபம் செய்யவேண்டும்.

(மோதிர விரல் நடுக் கணுவிலிருந்து கீழ்க் கணுவை 2 என்ட எண்ணி, பிறகு சுண்டு விரல் அடிக்கணு வழியாக மேலே (படத்தில் உள்ளது போல்) ஆள்காட்டி விரல் அடிக்கணுவரை 10 எண்ணி, பிறகு அங்கிருந்து அப்பிரதக்ஷிணமாக மோதிர விரல் நடுக்கணுவரை எண்ண 20 ஆகும். இப்படியே 108 வரை எண்ண வேண்டும்.)

த்4ருதா । த்வம்ச த4ாரய மாம் தே3விபவித்ரம் குரு சாஸநம்॥
அபஸர்பந்து தே பூ4தா யே பூ4தா பு4வி ஸம்ஸ்தி2தா: ।
யே பூ4தா விக்4நகர்த்தார: தே க3ச்ச2ந்து ஶிவாஜ்ஞயா ॥

பத்3மாஸநாய நம:, கூர்மாஸநாய நம:—ஆஸநே கூர்ம மண்ட3லே—ஆஸநாய ஓம் ப2ட் ஸ்வாஹா

என்று சொல்லி, பிறகு,

"சுக்லாம்ப3ரத4ரம்"

முதலியன யஜுர்வேதிகளைப்போல செய்யவும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

12. உபஸ்த்தானம்*

பிறகு மூன்று ப்ராணாயாமம் செய்து எழுந்து நின்று,

மமோபாத்த ஸமஸ்த து³ரிதக்ஷயத்³வாரா ஸ்ரீபரமேஶ்வர ப்ரீத்யர்த்தம் ப்ராதஸ்ஸந்த்⁴யா கா³யத்ரீ உபஸ்தா²நம் கரிஷ்யே

என்று ஸங்கல்பம் செய்தபின்,

உத்தம இத்யநுவாகஸ்ய வாமதே³வரிஷி: —அநுஷ்டுப் ச²ந்த³: — கா³யத்ரீதே³வதா — உபஸ்தா²நே விநியோக³:। உத்தமே ஶிக²ரே தே³வி பூ⁴ம்யாம் பர்வத மூர்த⁴நி। ப்³ராஹ்மணேப்⁴யோ ஹ்யநுஜ்ஞாநம் க³ச்ச² தே³வி யதா²ஸுக²ம் ॥

மித்ரஸ்ய சர்ஷணீத்⁴ருத:—ஶ்ரவோ தே³வஸ்ய ஸாநஸிம்—ஸத்யம் சித்ர ஶ்ரவஸ்தமம்—மித்ரோ ஜநாந்—யாதயதி ப்ரஜாநந்—மித்ரோ தா³தா⁴ர—ப்ருதி²வீமுத த்³யாம்—மித்ர: க்ருஷ்டீ ரநிமிஷாபி⁴—சஷ்டே—ஸத்யாய ஹவ்யம் க்⁴ருதவத்³விதே⁴ம—ப்ரஸமித்ர மர்த்தோ அஸ்து ப்ரயஸ்வாந்—யஸ்த ஆதி³த்ய ஶிக்ஷதி வ்ரதேந—நஹந்யதே ந ஜீயதே—த்வோதோ நைநமம்ஹோ அஶ்நோதி—அந்தி தோ ந தூ³ராத் ॥

13. திக்தேவதாவந்தனம்

பிறகு கீழ்க்கண்ட மந்த்ரங்களைச் சொல்லி இரண்டு கைகளையும் கூப்பி, கிழக்குமுதல் பிரதக்ஷிணமாக திக்தேவதைகளுக்கு அஞ்ஜலி செய்யவேண்டும்:

ஸந்த்⁴யாயை நம : (கிழக்கு)

ஸாவித்ர்யை நம : (தெற்கு)

கா³யத்ர்யை நம : (மேற்கு)

ஸரஸ்வத்யை நம : (வடக்கு)

ஸர்வாப்⁴யோ தே³வதாப்⁴யோ நமோ நம : (கிழக்கு)

காமோகார்ஷீந் மந்யுரகார்ஷீந் நமோ நம :

என்று சொல்லி

*(ஸாம வேதிகளின் உபஸ்த்தானம்: பக்கம் 30-ல் காண்க.)

(ரிக் வேதிகளின் உபஸ்த்தானம் : பக்கம் 31-ல் காண்க.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

* அபிவாதநம்

"அபி⁴வாத³யே ஆத்ரேய ஆர்ச்சநாநஸ ஶ்யாவாஶ்வ த்ரயார்ஷேய ப்ரவராந்வித ஆத்ரேய கோத்ர:, ஆபஸ்தம்ப ஸூத்ர:, யஜுஶ்ஶாகா²த்⁴யாயீ ஸ்ரீஸுப்ரஹ்மண்ய ஶர்மா நாமாஹம் அஸ்மி போ⁴:"

என்பதுபோல் அவரவர் தம் தம் கோத்ர ப்ரவர நாமங்களை சொல்லி அபிவாதநம் செய்து,

கீழ்க்கண்டவைகளால் திக்குகளுக்குக் கைகூப்பவும் :

ப்ராச்யை தி³ஶே நம :
த³க்ஷிணாயை தி³ஶே நம :
ப்ரதீச்யை தி³ஶே நம :
உதீ³ச்யை தி³ஶே நம :
ஊர்த்⁴வாய நம :
அத⁴ராய நம :
அந்தரிக்ஷாய நம :
பூ⁴ம்யை நம :
ப்³ரஹ்மணே நம :
விஷ்ணவே நம :
ருத்³ராய நம :
யமாய நம :

தெற்கு முகமாக நின்று

யமாய த⁴ர்மராஜாய ம்ருத்யவே சாந்தகாய ச ।
வைவஸ்வதாய காலாய ஸர்வபூத க்ஷயாய ச ॥
ஔது³ம்பராய த³த்⁴நாய நீலாய பரமேஷ்டி²நே ।
வ்ருகோத³ராய சித்ராய சித்ரகு³ப்தாய வை நம : ॥
சித்ரகு³ப்தாய வை நம ஓம் நம இதி.

மேற்கு முகமாக நின்று

ரிதகு³ம் ஸத்யம் பரம் ப்³ரஹ்ம
புருஷம் க்ருஷ்ண பிங்க³ளம்
ஊர்த்⁴வ ரேதம் விரூபாக்ஷம்
விஶ்வரூபாய வை நம :॥
விஶ்வரூபாய வை நம ஓம் நம இதி

* அபிவாதநம் செய்வதற்கு அநுகூலமாக சில முக்யமான கோத்ரப்ரவரங்கள் இப்புத்தகத்தின் கடைசியில் தரப்பட்டுள்ளன. அவரவர் கோத்ர ப்ரவரங்களைத் தெரிந்து அதன்படி சொல்லி அபிவாதநம் செய்யவும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வடக்கு முகமாக நின்று

நர்மத3ாயை நம : ப்ராத : நர்மத3ாயை நமோ நிஶி।
நமோஸ்து நர்மதே3 துப்4யம் த்ராஹி மாம் விஷஸர்ப்பத:॥
அபஸர்ப ஸர்ப ப4த்3ரம் தே தூ3ரம் க3ச்ச2 மஹாயஶா:॥
ஜநமேஜயஸ்ய யஜ்ஞாந்தே ஆஸ்தீகவசநம் ஸ்மரந்॥
ஜரத்காரோ : ஜரத்கார்வாம் ஸமுத்பந்நோ மஹாயஶா : ।
ஆஸ்தீக : ஸத்யஸந்தே4ா மாம் பந்நகே3ப்4யோ
பி4ரக்ஷது ॥

பந்நகே3ப்4ய: அபி3ரக்ஷத்வோம் நம இதி.

கிழக்கு முகமாக நின்று

நமஸ்ஸவித்ரே ஜக3தே3க சக்ஷுஷே
ஜக3த் ப்ரஸூதி ஸ்தி2தி நாஶ ஹேதவே ।
த்ரயீமயாய த்ரிகு3ணாத்ம தா3ரிணே
விரிஞ்சி நாராயண ஶங்கராத்மநே ॥

த்4யேயஸ்ஸதா3 ஸவித்ரு மண்ட3ல மத்4யவர்த்தீ
நாராயண : ஸரஸிஜாஸந ஸந்நிவிஷ்ட: ॥
கேயூரவாந் மகரகுண்ட3லவாந் கிரீடீ
ஹாரீ ஹிரண்மயவபு: த்4ருதஶங்க2சக்ர : ॥

ஶங்க2சக்ர க3தா3பாணே த்3வாரகா நிலயாச்யுத ।
கோ3விந்த3புண்ட3ரீகாக்ஷ ரக்ஷ மாம் ஶரணாக3தம்।
ஆகாஶாத் பதிதம் தோயம் யதா3 க3ச்ச2தி ஸாக3ரம்।
ஸர்வதே3வ நமஸ்கார: கேஶவம் ப்ரதி க3ச்ச2தி ॥
ஸ்ரீகேஶவம் ப்ரதி க3ச்ச2த்யோம் நம இதி.

பிறகு நமஸ்காரம், அபிவாதநம், ஆசமநம் செய்ய வேண்டும்.

பிறகு கையில் சிறிதளவு ஜலம் எடுத்துக்கொண்டு கீழ்க்கண்ட மந்த்ரத்தைச் சொல்லி கீழே விடவும் :

காயேந வாசா மநஸேந்த்3ரியைர் வா
பு3த்4யாத்மநா வா ப்ரக்ருதே: ஸ்வபா4வாத் ।
கரோமி யத்3யத் ஸகலம் பரஸ்மை
நாராயணாயேதி ஸமர்ப்பயாமி ॥

ஓம் தத்ஸத் ப்3ரஹ்மார்ப்பணமஸ்து

என்று சொல்லியபின், ஜபம் செய்த இடத்தை ஜலத்தால் ப்ரோக்ஷித்து அந்த ஜலத்தை மோதிர துரவிளடூாலல்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கீழ்க்கண்ட மந்த்ரம் சொல்லி நெற்றியில் திலகமிட்டுக்கொள்ள வேண்டும் :

"அத்3யாநோ தே3வ ஸவித:—ப்ரஜாவத்ஸாவீ: ஸௌப4க3ம் பராது3ஷ்வப்நியகு3ம்ஸுவ—விஶ்வாநி தே3வ ஸவித:—து3ரிதாநி பராஸுவ—யத்3ப4த்3ரம் தந் ம ஆஸுவ ||

யஜுர்வேதி காலை ஸந்த்யாவந்தனம் முற்றிற்று.

ஸாமவேதிகளின் உபஸ்த்தானம்

மூன்று தடவை ப்ராணாயாமம் செய்து,

மமோபாத்தஸமஸ்த துரிதக்ஷயத்வாரா ஸ்ரீபரமேஶ்வர ப்ரீத்யர்த்தம் ப்ராதஸ்ஸந்த்4யா கா3யத்ரீ உபஸ்தானம் கரிஷ்யே

என்று ஸங்கல்பித்து,

உத்தமே ஶிக2ரே தே3வி பூ4ம்யாம் பர்வதமூர்த4நி |
ப்3ராஹ்மணேப்4யோ ப்4யநுஜ்ஞானம் க3ச்ச2 தே3வி யதா2ஸுக2ம் ||

யஶோஹம் ப4வாமி ப்3ராஹ்மணானாம்—யஶோ ராஜ்ஞாம்—யஶோ விஶாம்—யஶ: ஸத்யஸ்யப4வாமி—ப4வாமி யஶஸாம் யஶ:—புநர்மாயந்து தே3வதா—யாமத3பசக்ரும—மஹஸ்வந்தோ மஹாந்தோ ப4வாமி—அஸ்மிந் பாத்ரே ஹரிதோ ஸோம பருஷ்டே2—ரூபம்ரூபம் மே தி3ஶ — பராதரஹஸ்ய தேஜஸ: |

அந்ந முக3ஸ்ப ப்ராஶிஷம்—அஸ்து த்வயி மயி த3ம்—யதி3த3ம் டஶ்யாமி சக்ஷுஷா—த்வயாத4த்தம் ப்ரபா ஸய—தேந மா பு4ஞ்ஜ—தேநபு4க்ஷிஷீய—தேந மாவிஶ—அஹர்நோ அத்யபீபரத்—ராத்ரிர்நோ அதிபாரயத் !

ஆதி3த்யநாவ மாரோக்ஷம்—பூர்ணாம் அபரிபாதி3நீம்—அச்சி3த்3ராம்—பாரயிஷ்ணவீம்—ஶததாரித்ராம் ஸ்வஸ்தயே—ஓம் நம ஆதி3த்யாய—நம ஆதி3த்யாய—நம ஆதி3த்யாய |
உத்3யந்தம் த்வாதி3த்ய அநூதி3யாஸம்

என்று சொல்லிய பிறகு, திக்தேவதாவந்தனங்களை யஜுர் வேதிகளைப்போல் செய்யவும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ரிக் வேதிகளின் உபஸ்த்தானம்

மித்ரஸ்யேதி திஸ்ருணும் ரிசாம் விஶ்வாமித்ர ரிஷி:— ஆத்^{3}யா கா^{3}யத்ரீ—த்^{3}வே த்ரிஷ்டுபௌ^{4} ச^{2}ந்த^{3}ாம்ஸி— மித்ரோ தே^{3}வதா—உபஸ்த^{2}ாநே விநியோக^{3}: |

மித்ரஸ்ய சர்ஷணீ த்^{4}ருத:—அவோ தே^{3}வஸ்ய ஸாநஸி —த்^{3}யும்நம் சித்ர ஶ்ரவஸ்தமம்—மித்ரோ ஜநாந் யாதயதி ப்^{3}ருவாணோ—மித்ரோ தா^{3}தா^{4}ர ப்ருதி^{2}வீ முத த்^{3}யாம்— மித்ரக்ருஷ்டீ ரநிமிஷாபி^{4} சஷ்டே—மித்ராய ஹவ்யம் க்^{1}ருதவஜ் ஜுஹோத—ப்ரஸ்மித்ர மர்தோ அஸ்து ப்ரயஸ் வாந—யஸ்த ஆதி^{3}த்ய ஶிக்ஷதி வ்ரதேந—ந ஹந்யதே ந ஜீயதே—த்வோதோ நைநம்—அகு^{3}ம்ஹோ அஶ்நோதி— அந்திதோ ந தூ^{3}ராத் ||

ஜாதவேத^{3}ஸ இத்யஸ்ய மந்த்ரஸ்ய கஶ்யப ரிஷி:— த்ரிஷ்டுப் ச^{2}ந்த^{3}:—து^{3}ர்கா^{3} தே^{3}வதா—உபஸ்தா^{2}நே விநி யோக^{3}: |

ஜாதவேத^{3}ஸே ஸுநவாம—ஸோம மராதீ— யதோ நித^{3} ஹாதி வேத^{3}:—ஸ. ந: பர்ஷ த^{3}தீது^{3}ர்க^{3}ாணி விஶ்வா நாவேவ ஸிந்து^{4}ம் து^{3}ரிதாத்யத்^{3}நி: |

பிஶங்க^{3}ப்^{3}ருஷ்டிமம் ப்^{3}ருணம்—பிஶாசிமிந்த்^{3}ர ஸம் ம்ருண—ஸர்வம் ரக்ஷோ நிப^{3}ர்ஹய ||

என்று பவித்திரவிரலால் பிரதக்ஷிணமாக முகத்தைச் சுற்றவும்

ப^{3}த்^{3}ரம்கர்ணேபி^{3}:— ஶ்ருணுயாம தே^{3}வா:—ப^{4}த்^{3}ரம் பஶ்யேமாக்ஷபி^{4}ர்யஜத்ரா:—ஸ்தி^{2}ரைரங்கை^{3}ஸ் துஷ்டு வாகு^{3}ம் ஸஸ் தநூபி^{4}:—வ்யஶேம தே^{3}வஹிதம் யத^{3}ாயு: |

என்று சுண்டு விரலால் காதுகளைச் சுற்றவேண்டும்.

கேஶ்யக்^{3}நிம் — கேஶீ வ்ருஷம் — கேஶீ ^{3}பி^{3}ப^{4}ர்த்தி ரோத^{3}ஸீ—கேஶீ விஶ்வம் ஸ்வர்த்^{3}ருஶே—கேஶீத^{3}ம் ஜ்யோ திருச்யதே ||

என்று கட்டை விரலால் குடுமியைச் சுற்றவேண்டும். பிறகு திக்தேவதாவந்தனம் யஜுர்வேதிகளைப்போல் செய்யவும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மாத்யாஹ்நிகம்

1. ஆசமனம்

சூரியன் நம் தலைக்கு நேராக உச்சியில் இருக்கும்பொழுது, வடக்குமுகமாகக் குந்திட்டு உட்கார்ந்து கைகளை முழந்தாள்களுக்குள்ளே அடக்கி உள்ளங்கையில் சிறிது ஜலம் எடுத்துக்கொண்டு கீழ்க்கண்ட மந்த்ரங்களைச் சொல்லி 3 தடவை உட்கொள்ள வேண்டும். இப்படி 2 ஆசமனம் செய்யவும்.

(1) ஓம் அச்யுதாய நம: (2) ஓம் அநந்தாய நம: (3) ஓம் கோவிந்தாய நம:

பிறகு, இருமுறை ஜலத்தால் உதடுகளைத் துடைத்து, கையை அலம்பி, கீழ்க்கண்ட மந்திரங்களைச் சொல்லி, அந்த அந்த விரலால் உடலின் அந்த அந்த பாகங்களைத் தொடவேண்டும்.

ஓம் கேஶவ	கட்டைவிரல்	வலது கன்னம்
,, நாராயண	,,	இடது கன்னம்
,, மாத⁴வ	பவித்திர விரல்	வலது கண்
,, கோ³விந்த³	,,	இடது கண்
,, விஷ்ணோ	ஆள்காட்டி விரல்	வலது மூக்கு
,, மது⁴ஸூத³ந	,,	இடது மூக்கு
,, த்ரிவிக்ரம	சுண்டு விரல்	வலது காது
,, வாமந	,,	இடது காது
,, ஶ்ரீதர⁴	நடுவிரல்	வலது தோள்
,, ஹ்ருஷீகேஶ	,,	இடது தோள்
,, பத்³மநாப⁴	எல்லா விரல்கள்	மார்பு
,, தா³மோத³ர	,,	சிரசு (தலை)

ஶுக்லாம்ப³ரத³ரம் விஷ்ணும் ஶஶிவர்ணம் சதுர்பு⁴ஜம் ।
ப்ரஸந்நவத³நம் த்⁴யாயேத் ஸர்வ விக்⁴நோபஶாந்தயே ॥

2. ப்ராணாயாமம்

நடுவிரலையும் ஆள்காட்டி விரலையும் மடித்து, கட்டை விரல் பவித்திர விரல்களால் மூக்கைப் பிடித்துக்கொண்டு, கீழ்க்கண்ட மந்த்ரத்தை உச்சரித்து மூச்சுக் காற்றை உள்ளிழுத்து மெதுவாக வெளியில் விடவேண்டும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"ஓம் பூ⁴:—ஓம் பு⁴வ:—ஓம் ஸுவ:—ஓம் மஹ:—ஓம் ஜந:—ஓம் தப:—ஓம் ஸத்யம்—ஓம் தத்ஸவிதுர் வரேணியம் ப⁴ர்கோ³ தே³வஸ்ய தீ⁴மஹி—தி⁴யோ யோ ந: ப்ரசோத³யாத்—ஓமாப:—ஜ்யோதீரஸ:—அம்ருதம் ப்³ரஹ்ம—பூ⁴ர்பு⁴வஸ்ஸுவரோம்."

என்று பிராணாயாமம் செய்தபின், வலது காதைத் தொடவும்.

3. ஸங்கல்பம்

பிறகு இடது உள்ளங் கையை நிமிர்த்தி, வலது துடைமேல் வைத்து, அந்தக் கைமேல் வலது உள்ளங்கையைக் கவிழ்த்து வைத்து,

"மமோபாத்த ஸமஸ்த து³ரிதக்ஷயத்³வாரா ஸ்ரீபரமேஶ்வர ப்ரீத்யர்த²ம் மாத்யாஹ்நிக ஸந்த்⁴யாம் உபாஸிஷ்யே"

என்று ஸங்கல்பம் செய்து, பிறகு

"ஓம்"

என்று ஜலத்தில் எழுதி,

"ஓம் ஸ்ரீ கேஶவாய நம:"

என்று சொல்லி, புருவங்களின் நடுவில் இட்டுக்கொள்ள வேண்டும்.

4. ப்ரோக்ஷணம்

